# பெண்கள் - குழந்தைகளுக்கு பாதுகாப்பான - நியாயமிக்க உலகத்தை உருவாக்குவோம்!

## 45–வது இந்திய குற்றவியல் துறை மாநாட்டில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

சென்னை,பிப்.23-

**சென்னை பல்கலைக்கழக வளாகத்தில், 6-வது சர்வதேச மற்றும் 45-வது அகில இந்திய குற்றவியல் துறை மாநாட்டை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து வாழ்த்திப் பேசுகையில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பான, நியாயமிக்க உலகத்தை உருவாக்குவோம்! என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

புகழ்பெற்ற சென்னை பல்கலைக்கழகத்தின் குற்றவியல் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 6-வது சர்வதேச மற்றும் 45-வது அகில இந்திய குற்றவியல் மாநாட்டைத் தொடங்கி வைக்க, இன்று உங்கள் முன் நிற்பதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

இந்த நிகழ்வு எனக்கு மட்டுமல்ல, நமது காலத்தின் முக்கியமான பிரச்சினையான பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தீர்ப்பதற்குத் தங்களை அர்ப்பணித்துள்ள அனைவருக்கும் முக்கியமானது.






தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2025) சென்னைப் பல்கலைக் கழக செனட் அரங்கில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் குற்றவியல் துறையின் சார்பில் நடைபெற்ற இந்திய குற்றவியல் சங்கத்தின் 6 வது சர்வதேச மற்றும் 45 வது அகில இந்திய குற்றவியல் மாநாட்டினை தொடங்கி வைத்து உரையாற்றினார். இந்நிகழ்வில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஜி.எம். அக்பர் அலி, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் குழு உறுப்பினர் முனைவர் சூ.ஆம்ஸ்ட்ராங், சென்னைப் பல்கலைக் கழக பதிவாளர் முனைவர் ச.ஏழுமலை, முன்னாள் டிஜிபி முனைவர். பி.எம்.நாயர் மற்றும் சென்னைப் பல்கலைக் கழக துணைவேந்தர் குழு உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர்!

இம்மாநாட்டில், நான் கலந்துகொள்வது குறித்து, மகிழ்ச்சியடைய பல காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக, இந்த மாநாட்டை `இந்திய குற்றவியல் சங்கம்' ஏற்பாடு செய்துள்ளது. செழுமையான பாரம்பரியம் மிக்க இந்நிறுவனத்தை 1970-ஆம் ஆண்டு நவம்பர் 18-ஆம் தேதி துவக்கிவைத்தவர் வேறு யாருமல்ல, நமது முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். சமூக நீதிக்கான அவரது தொலைநோக்குப் பார்வையும் அர்ப்பணிப்பும் தொடர்ந்து நம்மை ஊக்குவிக்கின்றன.

இரண்டாவதாக, இந்த மாநாட்டின் கருப்பொருள்: `பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களின் போக்குகள்: மாறிவரும் சமூகத்திற்கான தீர்வுகள்'.

அபாயகரமான அளவுக்கு அதிகரித்து வரும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை, உலகெங்கிலும் உள்ள சமூகங்கள் எதிர்கொண்டுவரும் இந்நேரத்தில், இந்த மாநாடானது, இது குறித்த விவாதம், மீளாய்வு மற்றும் நடவடிக்கைக்கான ஒரு முக்கியமான தளமாக இருக்கிறது.

### உலகளாவிய பிரச்சினை!

இந்தக் குற்றங்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பிற்கோ, கலாச்சாரதிற்கோ அல்லது சமூக-பொருளாதாரக் குழுவிற்கோ மட்டும் உரியவை அல்ல. இவை நமது ஒருங்கிணைந்த முயற்சியைக் கோரும் உலகளாவிய பிரச்சினை.

இதுகுறித்த புள்ளிவிவரங்கள் அதிர்ச்சியளிப்பதாகவும், மன வேதனை ஏற்படுத்துபவையாகவும் உள்ளன. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) அறிக்கையின்படி, இந்தியாவில் மட்டும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. 2020-இல், 3.71 லட்சம் வழக்குகள் பதிவாகியுள்ளன; 2021-இல், இந்த எண்ணிக்கை 4.28 லட்சமாகவும், 2022-இல் 4.45 லட்சமாகவும் உயர்ந்தது. 2023 மற்றும் 2024ஆம் ஆண்டிற்கான தரவுகளை என்.சி.ஆ.ர்பி. இன்னும் வெளியிடவில்லை. அதன் காரணம், அவர்களுக்கே வெளிச்சம். இந்தப் போக்கு ஆழ்ந்த கவலைக்குரியது.

### குறைவாகவே பதிவு!

இருப்பினும், பல வட மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தமிழ்நாட்டில் தொடர்ந்து குறைவாகவே பதிவு செய்யப்பட்டுள்ளன. இது நமது மாநில அரசின் ஆக்கப்பூர்வமான முன்னெடுப்புகளைப் பிரதிபலிக்கிறது. முற்போக்கான கொள்கைகள், திட்டங்கள் மற்றும் சட்டங்கள் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாதுகாப்பதில், தமிழ்நாடு நீண்ட காலமாக முன்னோடியாக இருந்து வருகிறது.

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாதுகாப்பதில், நமது திராவிட மாடல் அரசு உறுதியாக உள்ளது. சமீபத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவை இரண்டு முக்கிய மசோதாக்களை நிறைவேற்றியது - குற்றவியல் சட்டங்கள் (தமிழ்நாடு திருத்தம்) மசோதா-2025, மற்றும் தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடை (திருத்தம்) மசோதா-2025. இந்தத் திருத்தங்கள் பாலியல் குற்றங்களுக்கான தண்டனைகளை வலுப்படுத்துவதையும், டிஜிட்டல் மற்றும் மின்னணு தளங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளை துன்புறுத்துபவர்களுக்குத் தண்டனை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

### நடைமுறைப் பரிந்துரைகள்!

இந்தக் குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கான முழுமையான அணுகுமுறையை வடிவமைப்பதில், இந்த விவாதங்கள் இன்றியமையாதவை. இம்மாநாட்டில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதற்கும் அகற்றுவதற்கும் நடைமுறைப் பரிந்துரைகள் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.

இம்மாநாட்டில் பெறப்படும் அனைத்து பொருத்தமான பரிந்துரைகளையும் செயல்படுத்துவோம் என்று தமிழ்நாடு அரசின் சார்பில் உறுதியளிக்கிறேன். இம்மாநாடு உண்மையிலேயே உலகளாவிய சான்றோர்களின் கூடுகையாக இருக்கிறது. உலகம் முழுவதும் உள்ள மாணவர்கள், அறிஞர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் சமர்ப்பித்த 450 ஆய்வுக் கட்டுரைகளுடன், சர்வதேச அளவில் புகழ்பெற்ற 10-க்கும் மேற்பட்ட கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பேராசிரியர்களைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

### பாதுகாப்பான, நியாயமிக்க உலகம்!

600-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ள இம்மாநாடு, உலக அளவில் இந்தப் பிரச்சினையின் அவசரத்தையும் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டுகிறது. முடிவில், இந்த நிகழ்வை சாத்தியமாக்குவதற்கு பங்களித்த ஏற்பாட்டாளர்கள், பங்கேற்பாளர்கள் மற்றும் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிவைப் பகிர்வதற்கு மட்டுமல்லாமல், செயலூக்கம் பெறவும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பான, நியாயமிக்க உலகத்தை உருவாக்கவும் இந்தத் தளத்தைப் பயன்படுத்துவோம். இந்த மாநாடு சிறப்பாக நடைபெற வாழ்த்துகள். நமது கூட்டுமுயற்சிகள் அர்த்தமுள்ள மாற்றத்திற்கு வழிவகுக்கட்டும்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் கோவி. செழியன், மாநாட்டு ஏற்பாட்டு கமிட்டியின் தலைமை ஆலோசகர் நீதிநாயகம், ஜி.எம். அக்பர் அலி, டாக்டர் பி.எம். நாயர் ஐ.பி.எஸ். (ஓய்வு), மாநாட்டு ஏற்பாட்டு கமிட்டியின் தலைவர் டாக்டர் எம்.ஸ்ரீநிவாசன், சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் ஆம்ஸ்ட்ராங், இந்திய குற்றவியல் துறை சங்கத்தின் தலைவர் டாக்டர் சக்ரபர்த்தி, டாக்டர் பூர்வி பொக்காரியல், டாக்டர் பரமசிவன், சென்னை பல்கலைக் கழக பதிவாளர் டாக்டர் எஸ். ஏழுமலை, பேராசிரியர்கள் டாக்டர். எம்.டி ஆலன் செல்வகுமார், சொக்கலிங்கம் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

---

## கலைத்துறையின் முன்னேற்றத்திற்காக கழக அரசு எப்போதுமே பாடுபட்டிருக்கிறது!

# திரைக் கலைஞர்கள் நலனில் என்றைக்கும் முழு அக்கறையுள்ள அரசு இது!

### திரைப்படத் துறையினருக்கு – பையனூரில் வீடுகள் கட்டிக் கொள்ள

### புதுப்பிக்கப்பட்ட அரசாணைகளை வழங்கி – துணை முதல்வர் பெருமிதம்!

சென்னை, பிப். 23-

**திரைப்படத் துறையினர் பையனூரில் வீடுகள் கட்டிக் கொள்ள, வருவாய்த் துறையின் சார்பில், புதுப்பிக்கப்பட்ட அரசாணைகளை நேற்று முன்தினம் காலை, தமது இல்லத்தில் வழங்கிய பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த துணை முதல்வர்உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "கலைத் துறையின் முன்னேற்றத்திற்காக கழக அரசு எப்போதுமே பாடுபட்டிருக்கிறது" என்றும் "திரைக் கலைஞர்கள் நலனில் என்றைக்கும் முழு அக்கறையுள்ள அரசு, கழக அரசு" என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:**

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசை பொறுத்தவரை, கலைத்துறையினுடைய முன்னேற்றத்திற்காக எப்போதுமே பாடுபட்டிருக்கிறோம். திரைக் கலைஞர்களுடைய நலனில் என்றைக்கும் முழு அக்கறையோடு இந்த அரசு செயல்பட்டிருக்கிறது.

அந்த அடிப்படையில், கடந்த 2010ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில், தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனம், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம், தென்னிந்திய நடிகர் சங்கம், தமிழ்நாடு சின்னத் திரை நடிகர்கள் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் பயன்பெறுகின்ற வகையில், சென்னை, கேளம்பாக்கத்தை அடுத்த பையனூரில் 90 ஏக்கர் இடத்தை ஆண்டுக்கு 1000 ரூபாய் வீதம் 99 ஆண்டுகள் லீஸ்க்கு (குத்தகைக்கு)



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழங்கியிருந்தார்கள். அரசாணையின்படி, அந்த இடத்தில் மூன்று ஆண்டுகளுக்குள் அவர்கள் அந்த கட்டிடங்களை கட்டி பயன்படுத்தியிருக்க வேண்டும். அதில் காலதாமதம் ஆகிவிட்டது. எனவே, நம்முடைய ஆட்சி அமைந்தவுடன் அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களையும், என்னையும் சந்தித்து அதை புதுப்பித்து (renewal) செய்து தரவேண்டும் என்று வேண்டுகோள் வைத்திருந்தார்கள். ஆகவே, குத்தகை பெற்ற சங்க நிர்வாகிகள் வைத்திருந்த கோரிக்கையின் முக்கியத்துவத்தை அறிந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கையை ஏற்று அரசாணையை புதுப்பிக்க உத்தரவிட்டார்கள்.

### அடுக்குமாடி குடியிருப்புகள்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குத்தகைக்கு வழங்கிய அந்த 90 ஏக்கர் இடத்தின் இன்றைய சந்தை மதிப்பு (Market value) கிட்டத்தட்ட 180 கோடி ரூபாய் இருக்கும். ஆனாலும், அதே இடத்தை திரைத் துறையின் நலன் கருதி, மீண்டும் அவர்களிடமே குத்தகைக்கு விடுகின்ற வண்ணம் புதுப்பிக்கப்பட்ட அந்த அரசாணையை இன்றைக்கு அவர்களிடத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. இதில் மேற்கண்ட சங்கத்தினர் அடுக்கு மாடி குடியிருப்புகளை கட்டிக் கொள்ளலாம் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

புதுப்பிக்கப்பட்ட அரசாணையின் மூலம், இடத்தினை பெற்ற திரைத்துறை சங்கத்தினருக்கு என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர். ராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பெ. அமுதா, தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவர் நாசர், துணைத் தலைவர்கள் பூச்சி முருகன், கருணாஸ், செயலாளர் நடிகர் ராஜேஷ், வி.தாசரதி, தென்னிந்திய திரைப்பட தொழிலாளர்கள் சம்மேளனத் (பெப்ஸி) தலைவர் ஆர்.கே.செல்வமணி, துணைத் தலைவர் அசோக் மேத்தா, தமிழ்நாடு சின்னத்திரை கலைஞர்கள் கூட்டமைப்பின் தலைவர் மங்கை அரிராஜன், தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைவர் திரு. முரளி ராமநாராயணன், செயலாளர் கதிரேசன், துணைச் செயலாளர் சௌந்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

## ரயில்களில் முன்பதிவில்லாப் பெட்டிகளின் எண்ணிக்கை குறைப்பு!

# வழக்கம்போல் பரிதாபங்களை மேலும் கூட்டிய 'குரூர' அரசு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, பிப்.23-

**நாடு முழுவதும் இயக்கப்படும் 26 ரயில்களில் முன்பதிவில்லாப் பெட்டிகளைக் குறைத்து ஒன்றிய அரசு அறிவித்துள்ளதையடுத்து வலைதளப் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "வழக்கம்போல் பரிதாபங்களை மேலும் கூட்டிய Sadist (குரூர) அரசு" என ஒன்றிய அரரைக் கடுமையாகச் சாடியுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:

சமூக வலைதளம் முழுக்க இரயில் பரிதாபங்கள் வீடியோக்களைப் பார்த்தோம்!

அதைப் பார்த்தாவது எளிய மக்களுக்கான Unreserved பெட்டிகளைக் கூட்டுவார்கள் என்று பார்த்தால், வழக்கம்




போல பரிதாபங்களைத்தான் மேலும் கூட்டியுள்ளது Sadist அரசு!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## தமிழை வீழ்த்த வந்த சூழ்ச்சிகளை எல்லாம் தமிழ்நாடு வீழ்த்தியே வந்திருக்கிறது!

# புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வரிகளுக்கு ஏற்ப - ஒன்றுபட்டு நம் தமிழ் காப்போம்!

### உலகத் தாய்மொழி நாள் வாழ்த்துச் செய்தியில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

சென்னை, பிப்.23-

உலகத்தாய் மொழி நாளையொட்டி துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்த வாழ்த்துச் செய்தியில், "புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வரிகளுக்கு ஏற்ப ஒன்றுபட்டு நம் தமிழ் காப்போம்!" என்று உறுதியுடன் குறிப்பிட்டுள்ளார்.

துணை முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**தாய்மொழி என்பது வெறும் தொடர்புக்குதவும் கருவி மட்டுமல்ல. ஓர் இனத்தின் அடையாளம், பண்பாடு, வரலாற்றின் அடித்தளம்!**

**தமிழைக் காக்க வேண்டும் என்ற நம் உணர்வுக்கும், இந்தியைத் திணிக்க வேண்டும் எனும் பாசிச சூழ்ச்சிக்கும் இதுவே அடிப்படை!**

**தமிழை வீழ்த்த வந்த சூழ்ச்சிகளை எல்லாம் கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டாக தமிழ்நாடு வீழ்த்தியே வந்திருக்கிறது!**

**இனியும் வீழ்த்தும்!**

**"எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே " எனும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வரிகளுக்கு ஏற்ப ஒன்றுபட்டு நம் தமிழ் காப்போம்!**

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.